### ரூ.143.69 கோடியில் 700 படுக்கைகளுடன் அனைத்து வசதிகள் கொண்ட – சென்ற மாதம் திறக்கப்பட்ட

# உதகை அரசு மருத்துவமனை: மக்களிடம் மிகுந்த வரவேற்பு!

## நேரில் ஆய்வு செய்த பின் - முதல்வர் மு.க.ஸ்டாலின் பேட்டி!

**உதகை, மே 15 -**

**நீலகிரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் ஆய்வு மேற்கொண்டார்.**

நீலகிரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, உதகமண்டலத்தில் 25 ஏக்கர் பரப்பளவில் 143.69 கோடி ரூபாய் செலவில் 700 படுக்கைகளுடன் 8 தனித்துவமான கட்டடங்களை ஒன்றாக இணைக்கும் மையக் கட்டடம், வெளிநோயாளிகள் மருத்துவ சேவை களுக்கான Block A மற்றும் B கட்டடங்கள், Block Cயில் 10 நவீன அறுவை சிகிச்சை அறைகள், Block Dயில் தீவிர மருத்துவ மற்றும் அறுவை சிகிச்சை பிரிவுகள், Blocks E, F, G & H ஆகியவற்றில் உள்நோயாளிகள் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெறும் வகையில் நான்கு பிரிவுகள், மலைவாழ் மக்களிடையே காணப்படும் இரத்தசோகை, சிக்கில்செல் அனீமியா மற்றும் தலசீமியா ஆகிய நிலைப்பாடுகளுக்கு சிகிச்சை அளிக்கும் வகையில் BlockFல் சிறப்பு மருத்துவப் பிரிவு, 20 படுக்கை களுடன் 24 மணி நேரமும் விபத்து மற்றும் அவசர மருத்துவ சேவைகளான அவசர மருத்துவப் பிரிவு (Emergency Block) ஆகிய வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ளது.

**நீலகிரி மாவட்ட மக்களுக்கு பயனளிக்கும் மருத்துவமனை!**

இப்புதிய மருத்துவமனை வளாகத்தில் அவசர மற்றும் திட்டமிட்ட அறுவை சிகிச்சைகளுக்குத் துணையாக அனைத்து வசதி களும் கொண்ட இரத்த வங்கி, நோயாளி களுக்கு சத்துள்ள உணவு வழங்குவதற்காக சமையலறை, அதிநவீன வசதிகளுடன் தானியங்கி சலவை இயந்திரம், உலர்த்தும் இயந்திரம் மற்றும் சலவை இயந்திரங்கள், தனியான பிரேதக் கூடம் (Mortuary Block) ஆகியவையும் அமைக்கப்பட்டுள்ளது.

நீலகிரி மாவட்ட மக்களுக்கு மிகுந்த பயனளிக்கும் இச்சிறப்புமிக்க நீலகிரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 6.4.2025 அன்று திறந்து வைத்தார்.



முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (14.5.2025) நீலகிரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு நேரில் சென்று, பார்வையிட்டு ஆய்வு செய்து, நோயாளிகளிடம் மருத்துவ வசதிகள் குறித்தும், அவர்களது தேவைகள் குறித்தும் கேட்டறிந்தார். இந்நிகழ்வின்போது, நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.ராசா, அரசு தலைமைக் கொறடா கா.ராமச்சந்திரன், நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.லட்சுமி பவ்யா தண்ணீரூ, நீலகிரி அரசு மருத்துவக் கல்லூரி முதல்வர் மருத்துவர் எம்.கீதாஞ்சலி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

**மருத்துவ வசதிகள் குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆய்வு!**

நீலகிரி மாவட்டத்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (14.5.2025) நீலகிரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு நேரில் சென்று அதன் செயல்பாடுகள் குறித்து பார்வையிட்டு ஆய்வு செய்து, நோயாளிகளுக்கு அளிக்கப்படும் சிகிச்சை முறைகள் குறித்து மருத்துவர்களிடம் கேட்டறிந்தார்.

மேலும், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், மருத்துவமனையில் உள்ள நோயாளிகளிடம் மருத்துவ வசதிகள் குறித்தும், அவர்களது தேவைகள் குறித்தும் கேட்டறிந்தார். அப்போது சிகிச்சைக்கு வந்த மக்கள், தங்களுக்கு சிறப்பான முறையில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதாகவும், அனைத்து நவீன வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ள இம்மருத்துவமனையை திறந்து வைத்ததற்காக முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொண்டனர்.

இந்த ஆய்வின்போது, முதலமைச்சர் அவர்கள், சிகிச்சைக்கு வரும் முதியவர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும் என்றும், மருத்துவ மனைக்கு நேரில் வந்து சிகிச்சை பெற முடியாத நோயாளிகளுக்கு "மக்களைத் தேடி மருத்துவம்" திட்டம், சாலை விபத்துகளில் காயமடைந்தவர்களுக்கு "இன்னுயிர் காப்போம் நம்மை காக்கும் 48" திட்டம் போன்ற பல்வேறு திட்டங்கள் குறித்து மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும் என்றும் மருத்துவர்களிடம் அறிவுறுத்தினார்.

**பயிற்சி மருத்துவர்களுடன் கலந்துரையாடிய முதல்வர்!**

மேலும், பயிற்சி மருத்துவர்களிடம் முதலமைச்சர் அவர்கள் கலந்துரையாடி, சிகிச்சைக்கு வரும் மக்களிடம் கனிவுடன் நடந்து கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்தினார். அத்துடன் மருத்துவப் பணியாளர்களின் வருகை பதிவேடுகள், மருந்து இருப்பு பதி வேடுகள் ஆகியவற்றையும் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

அதனைத் தொடர்ந்து நீலகிரி அரசு மருத்துவக் கல்லூரிக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டார். அப்போது மருத்துவக் கல்லூரி மாணவர் களுடன் கலந்துரையாடியபோது, வீட்டிற்கும் நாட்டிற்கும் பெருமைத் தேடி தரும் வகையில் சேவை மனப்பான்மையுடன் மருத்துவப் பணியை மேற்கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்தினார். பின்னர், மருத்துவக் கல்லூரி மாணவர்களின் தேவைகள் குறித்து கேட்டறிந்தார்.

இந்த ஆய்விற்கு பின்னர், முதலமைச்சர் அவர்கள் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில்,

கடந்த ஏப்ரல் மாதம் திறந்து வைத்த நீலகிரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையின் செயல்பாடுகளை ஆய்வு செய்வதற்காக இன்று நேரில் வந்ததாகவும், 143 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள இம்மருத்துவமனை மக்களிடம் மிகுந்த வரவேற்பை பெற்றுள்ளது என்றும், தினசரி 1300 வெளிநோயாளிகள் சிகிச்சை பெற்று வருகிறார்கள் என்றும் தெரிவித்தார். மேலும், உள்நோயாளிகள் சிகிச்சையும் சிறப்பாக அளிக்கப்பட்டு வருகிறது என்றும், தனியார் மருத்துவமனையில் அதிக கட்டணம் செலுத்தி எடுத்து வந்த எம்.ஆர்.ஐ. சி.டி. ஸ்கேன் போன்றவை கட்டணமில்லாமல் தற்போது நோயாளிகள் எடுத்து வருவதாகவும் தெரிவித்தார்.

**சிறப்பாகச் செயல்படும் உதகை மருத்துவமனை!**

மருத்துவக் கல்லூரி மாணவர்களை நேரில் சந்தித்த போது, அவர்களுக்கு செய்து தரப்பட்டுள்ள வசதிகள் குறித்தும், தேவைகள் குறித்தும் கேட்டறிந்ததாகவும், அப்போது எந்த குறையுமில்லாமல் சிறப்பாக உள்ள தாக அம்மாணவர்கள் தெரிவித்தாகவும், தேவைப்படும் கூடுதல் வசதிகளையும் செய்து தர அரசு தயாராக உள்ளதாகவும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்வின்போது, நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.ராசா, அரசு தலைமைக் கொறடா கா.ராமச்சந்திரன், நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.லட்சுமி பவ்யா தண்ணீரூ, நீலகிரி அரசு மருத்துவக் கல்லூரி முதல்வர் மருத்துவர் எம்.கீதாஞ்சலி, மருத்துவக் கல்லூரி துணை முதல்வர் மருத்துவர் ஜெயலலிதா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

# உதகையில் 127-வது மலர் கண்காட்சி - முதல்வர் இன்று தொடங்கி வைக்கிறார்!

**நீலகிரி, மே 15-**

**உதகையில் 127-வது மலர் கண்காட்சியை இன்று காலை 10.30 மணியளவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைக்கிறார்.**

இவ்விழாவில் மாவட்ட ஆட்சியர் லட்சுமி பவ்யா தண்ணீரு வரவேற்கிறார். வ.தட்சிணா மூர்த்தி திட்ட விளக்க உரையாற்றுகிறார்.

விழாவிற்கு அமைச்சர் மு.பெ. சாமிநாதன் முன்னிலையும் அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தலைமையும் வகிக்கின்றனர்.

இவ்விழாவில் அரசு கொறடா கா.ராமச்சந்திரன், ஆ.இராசா எம்.பி., ஆர்.கணேஷ் எம்.எல்.ஏ., பொன்.ஜெயசீலன் எம்.எல்.ஏ., மு.பொன்தோஸ், என்.எஸ்.நிஷா, எம்.வாணீஸ்வரி, எஸ்.கிருபா சங்கர், ஹெச். ஆர்.கௌசிக் ஆகியோர் வாழ்த்துரை வழங்குகின்றனர். பெ.குமாரவேல் பாண்டியன் நன்றி கூறுகிறார்.

நீலகிரிக்கு வரும் சுற்றுலா பயணி களை கவரும் வகையில் தோட்டக்கலைத்துறை சார்பில், ஆண்டுதோறும் மே மாதம் கோடை விழா மற்றும் மலர் கண்காட்சி நடத்தப்பட்டு வருகிறது. இந்த ஆண்டு கோடை விழா கடந்த 3ந் தேதி கோத்தகிரியில் காய்கறி கண்காட்சியுடன் தொடங்கியது.

இதைத் தொடர்ந்து கூடலூரில் வாசனை திரவிய கண்காட்சி 3 நாட்கள் நடைபெற்றது. ஊட்டி ரோஜா பூங்காவில் நடைபெற்று வரும் ரோஜா கண்காட்சி நிறைவடைந்தது.

இதையடுத்து சர்வதேச அளவில் புகழ்பெற்ற ஊட்டி மலர் கண்காட்சி இன்று (15-ந் தேதி) தொடங்கி 11 நாட்கள் நடைபெற உள்ளது. இந்த நிலையில் மலர் கண்காட்சியை தொடங்கி வைக்க முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 5 நாட்கள் சுற்றுப்பயணமாக ஊட்டிக்குச் சென்றார். அவர், விமானம் மூலம் கோவை சென்று, அங்கிருந்து சாலை மார்க்கமாக கார் மூலம் ஊட்டிக்குச் சென்றார். ஊட்டிக்கு வரும் வழியில் கோத்தகிரி, கட்டப்பெட்டு உள்ளிட்ட இடங்களில் கட்சியினர், பொதுமக்கள் வரவேற்பு அளித்தனர்.

இதைத்தொடர்ந்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஊட்டியில் பொதுமக்களுக்கு பட்டா வழங்கும் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பழங்குடியின மக்களைச் சந்தித்து பேசினார்.

இன்று ஊட்டி அரசு தாவரவியல் பூங்காவில் 127-வது மலர்க் கண்காட்சியை தொடங்கி வைத்து, மலர் அலங்காரங்களை பார்வையிடுகிறார்.

இதையடுத்து நாளை (16-ந் தேதி) 5 நாட்கள் சுற்றுப்பயணம் முடிந்து சென்னை திரும்புகிறார்.



காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், ஆலந்தூர் தொகுதிக்குட்பட்ட, குன்றத்தூர் வடக்கு ஒன்றிய தி.மு.க சார்பில் ஒன்றிய துணைச் செயலாளர் கே.வசீகரன் தலைமையில் கெருகம்பாக்கம் ஊராட்சியில் நடைபெற்ற ”நாடு போற்றும் நான்கு ஆண்டு; இது தொடரட்டும் பல்லாண்டு கழக அரசின் நான்கு ஆண்டு சாதனை விளக்க மாபெரும் பொதுக்கூட்டத்தில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் கழக பேச்சாளர்கள் கவிஞர் ஈகை.கோ.தனசேகரன் ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றினார்கள். அருகில் ஒன்றிய செயலாளர்கள் ஏ.வந்தேமாதரம், இ.மணி, நகர செயலாளர் பட்டூர் எஸ்.ஜபருல்லா, தலைமை பொது குழு உறுப்பினர் கே.எத்திராஜ் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.



சட்டமன்ற மானியக் கோரிக்கை 2025–26 அறிவிப்பின் கீழ், நகர்ப்புற சுகாதார மற்றும் நலவாழ்வு மையங்களில் தடுப்பூசி சேவைகள் விரிவாக்கம் செய்யப்படும் என்ற அறிவிப்பினைத் தொடர்ந்து, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் அவர்கள் நேற்று (14.05.2025) தியாகராயநகர் நகர்ப்புற சுகாதார மற்றும் நலவாழ்வு மையத்தில் தடுப்பூசி சேவையினைத் தொடங்கி வைத்துப் பொதுமக்களுக்கு தடுப்பூசி சேவைகள் குறித்து தெரிந்து கொள்ளும் வகையில் தடுப்பூசி தகவல் கையேட்டினை வெளியிட்டார். இந்நிகழ்ச்சியில், ஆயிரம் விளக்கு சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் நா. எழிலன், மருத்துவம்மக்கள் நல்வாழ்வுத் துறை அரசு முதன்மைச் செயலாளர் முனைவர் ப. செந்தில்குமார், கூடுதல் ஆணையாளர் (சுகாதாரம்) டாக்டர் வி. ஜெயசந்திர பானு ரெட்டி, மத்திய வட்டார துணை ஆணையாளர் கே.ஜெ.பிரவீன் குமார், நிலைக்குழுத் தலைவர் (பொதுசுகாதாரம்) டாக்டர் கோ. சாந்தகுமாரி, பொதுசுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத்துறை இயக்குநர் டாக்டர் டி.எஸ்.செல்வவிநாயகம், மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் டாக்டர் சங்குமணி, கூடுதல் மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் டாக்டர் தேரணி ராஜன், மாநகர நல அலுவலர் டாக்டர் எம். ஜெகதீசன் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று (14.05.2025) சென்னை, கொளத்தூர் பூம்புகார் நகரில் ரூ.25 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் கபாலீசுவரர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி புதிய கட்டட கட்டுமானப் பணிகளை இடத்தினை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்து பணிகளை விரைந்து முடித்திட அலுவலர்கள் மற்றும் பொறியாளர்களுக்கு அறிவுரைகளை வழங்கினார். உடன் இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என்.ஸ்ரீதர், கூடுதல் ஆணையர் சி.ஹரிப்ரியா, இணை ஆணையர் பெ.க.கவெனிதா, மாநகராட்சி மண்டலக் குழுத் தலைவர் சரிதா மகேஷ்குமார் மற்றும் அலுவலர்கள் உள்ளனர்.